பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 27 | சனிக்கிழமை | 11.01.2025 | அதிர்வு 162

## தமிழரசுக் கட்சி எம்.பிக்களை சந்தித்த ஹரி ஆனந்தசங்கரி



(விஜயரத்தினம் சரவணன்)

கனடாவின் முடிக்குரிய பூர்வீகக் குடிகள், வடக்கு விவகாரங்கள் மற்றும் வடக்கு

05

# சாணக்கியன், சுமந்திரன், சிறீதரன் மாநாட்டில் பங்குபற்ற தமிழகத்துக்கு



(ந.லோகதயாளன்)

தமிழ்நாட்டில் இன்றும் நாளையும் “எத்திசையும் தமிழணங்கே“ என்ற தலைப்பில் இடம்பெறும் உலக புலம் பெயர் தமிழர்கள் தின நிகழ்வில் தமிழகஅரசின்அழைப்பின்பெயரில்கலந்து கொள்வதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், சிவஞானம் சிறீதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தமிழ்நாட்டுக்குச்

05



# உலகத் தமிழாராய்ச்சி படுகொலைதான் தற்காப்புப் போராட்டத்துக்கு வித்திட்டது!

## யாழ். நினைவேந்தல் நிகழ்வில் சி.வி.கே. சுட்டிக்காட்டு

(எஸ்.நிதர்ஷன்)

உலகத் தமிழாராய்ச்சி படுகொலை தான் தமிழர்களின் தற்காப்புப் போராட்டத்துக்கு வித்திட்டது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

05

# சிறீதரன் எம்.பிக்குப் பயணத் தடை எனக் கூறி விமான நிலையத்தில் அவரைத் தடுக்க முயற்சி

(ந.லோகதயாளன்)

தமிழ்நாட்டில் இன்றும் நாளையும் “எத்திசையும் தமிழணங்கே” என்ற தலைப்பில் இடம்பெறும் உலக புலம்பெயர் தமிழர்கள் தின நிகழ்வில் தமிழக அரசின் அழைப்பின் பெயரில் கலந்துகொள்வதற்காகச் சென்னை செல்வதற்கு நேற்று கட்டுநாயக்க பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையம் சென்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விமான நிலைய அதிகாரிகளால் தடுக்கப்பட்டார்.

இதையடுத்து எந்த உத்தரவு மூலம் தடுக்கப்படுகின்றேன் என்ற கேள்வியை நாடாளுமன்ற உறுப்பினர் எழுப்பிய போதும் விமான நிலைய அதிகாரிகளால் உரிய பதில் அளிக்கப்படவில்லை.

05






இலங்கையில் மேனிலை நீதிமன்றங்களில் ஏற்பட்டுள்ள நீதியரசர் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கைகளை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஆரம்பித்திருக்கிறார்.

அரசமைப்புக் கவுன்ஸிலுடன் முரண்பட்டுக் கொண்டு மேனிநிலை நீதிமன்ற நீதியரசர்கள் நியமனங்களை உரிய காலத்தில் செய்யாமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இழுத்தடித்தமையால் அந்த நீதிமன்றங்களில் பல நீதியரசர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் நீதித்துறை நெருக்கடிகளை எதிர் கொண்டு வந்தது.

இந்தப் பின்புலத்தில் புதிய ஜனாதிபதி பதவியேற்றதும் நீதியரசர்கள் நியமனங்கள் இடம் பெறத் தொடங்கியுள்ளன. ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு புதிய நீதியரசர்கள் நியமனம் இடம்பெற்றுள்ளன.

இப்போது உயர்நீதிமன்றத்தில் நிலவும் நான்கு நீதியரசர்கள் நியமனங்களுக்குப் புதியவர்களை நியமிக்கும் செயற்பாடு ஆரம்பித்துள்ளது.

உயர் நீதிமன்றத்திற்கு நான்கு

05




# பிக்கு பல்கலைக்கழகத்துக்கு காலவரையறையின்றி பூட்டு

அநுராதபுரம் பிக்கு பல்கலைக்கழகம் காலவரையறை யின்றி மூடப்பட்டுள்ளது.

பிக்கு மாணவர்கள் முன்னெடுத்துள்ள உணவுத்தவிர்ப்பு போராட்டம் காரணமாக பல்கலைக்கழக நிர்வாகம் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

பகிடிவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 10 சிரேஸ்ட பிக்கு மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள் ளது.

இந்த வகுப்புத்தடையை நீக்குதல் உள்ளிட்ட கோரிக்கை களை முன்வைத்து கடந்த 7 ஆம் திகதி முதல் போராட் டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கது.

# 26 வயது இளைஞருக்கு ஆயுள் தண்டனை



26 வயது இளைஞர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதி மன்றத்தால் நேற்று ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள் ளது.

சிறைச்சாலைக்குள் 25 கிராமுக்கும் அதிகமான ஹெரோ யின் போதைப்பொருளை கொண்டுசென்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டதையடுத்து இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆம் திகதி கொழும்பு விளக்க மறியல் சிறைச்சாலையில் இருந்த தமது நண்பருக்கு உணவு கொண்டுசென்ற பொதியில் ஹெரோயினை மறைத்து கொண்டுசென்ற சந்தர்ப்பத்தில் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

ஹெரோயினை தம்வசம் வைத்திருந்தமை மற்றும் கடத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் சட்ட மா அதிபரால் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப் பட்டது.

# மொட்டு அணியினருக்கு சுதந்திரக் கட்சி அழைப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறியுள்ள அனைவரும் மீண்டும் தாய்வீடு திரும்ப வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் அக்கட்சியின் பொதுச்செயலா ளரான முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

“மொட்டுக் கட்சிகூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பி னர்களால்தான் ஆரம்பிக்கப்பட்டது. எனவே, சுதந்திரக் கட்சி என்ற தாய்வீட்டில் கதவுகள் திறந்தே உள்ளன. கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் வரலாம்.

சுதந்திரக் கட்சியின் வாக்குகள்தான் தேசிய மக்கள் சக் திக்குச் சென்றுள்ளது. தற்போது அரசியல் என்பது நாடா ளுமன்றத்தில் இல்லை. அதற்கு வெளியில்தான் உள் ளது. எனவே, நாடாளுமன்றத்துக்கு வெளியில் சமூ கத்தை அணிதிரண்ட சுதந்திரக் கட்சி தயாராக உள்ளது.” - என்றார்.






# இரத்தினக்கல் தொழிற்துறையில் தாய்லாந்தை முந்தவேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் தெரிவிப்பு

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்துறைக்கு விதிக்கப்பட்டுள்ள வற் மற்றும் சமூகப் பாதுகாப்பு வரிகள் நீக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஜெம் ஸ்ரீலங்கா 2025 சர்வதேச இரத்தினக்கல் கண்காட்சியைப் பார்வையிட்டதன் பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்தத் தொழிலின் நிகர இலாபத்திற்கு வரி விதிக்கப்படக் கூடாது. எமது நாட்டில் இந்தத் துறையை மழுங்கடிப்பதற்குப் பதிலாக இத்தொழிற் துறையை முன்னேற்றுவதற்குச் சாதகமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமின்றி, திறமையான கைவினைஞர்களை உருவாக்கி, ஏற்றுமதித் தொழிலாக இதனை மேலும் முன்னேற்றுவதற்கு அதிகபட்ச சலுகைகளை வழங்க வேண்டும்.

எனவே, இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலுக்கு நேர்மறையான குறுகிய கால வேலைத்திட்டமொன்றை வகுத்து அதனைச் செயல்படுத்தி, இத்தொழிலை மேம்படுத்த வேண்டும். ஹொங்கொங் மற்றும் தாய்லாந்தை முந்திச் செல்லும் வகையில் எமது நாட்டின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலை உருவாக்க வேண்டும்.” – என்றார்.













# பல வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு வடக்கு மாகாணத்தில் இடமாற்றங்கள்

(ந.லோகதயாளன்)

வடக்கில் உள்ள சில வலயக் கல்விப் பணிப்பாளர்கள் வடக்கு மாகாண பிரதம செயலாளரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய தற்போதைய துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் –

வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)

திருமதி யமுனா ராஜசீலன் – வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் வலிகாமம் வலய (புதில்) வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி லாவண்யா சுகந்தன் வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) பதவிக்கும் தற்போதைய வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரான

திருமதி அன்னமலர் சுரேந்திரன் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றப்பட்டுள்ளார்.



# அரிசி இறக்குமதிக்கான கால அவகாசம் நிறைவு

அரிசி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளது.

நேற்று நள்ளிரவின் பின்னர் இறக்குமதி செய்யப்படும் அரிசி தொகை திருப்பியனுப்பப்படும் என வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே, அரிசி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட காலப்பகுதியை பயன்படுத்தி தனியார் இறக்குமதியாளர்களால் இதுவரை 125,000 மெட்ரிக் தொன்னுக்கும் அதிக தொகை அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் தலையீட்டுடன் 5,000 மெட்ரிக் தொன் அரிசி நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

# லஞ்சம், ஊழல் ஆணைக்குழுவிற்கு புதிய பணிப்பாளர் நாயகம் நியமனம்

லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக உயர் நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 17 (1) இன் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நீதியரசர்களை ஒரே சமயத்தில் நிரப்புவது என்பது நீதித்துறை மற்றும் பரந்த சட்ட கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை – மாற்றங்களை – ஏற்படுத்தக் கூடியது என்று சுட்டிக்காட்டும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இந்த நீதியரசர்கள் நியமன விடயத்தில் பணி மூப்பு, தகுதிக்கு முன்னுரிமை, திறமை ஆகியவற்றுக்கு இடம் அளிக்கும்படி வலியுறுத்தியுள்ளது. அதே சமயத்தில், இந்த நியமன விடயங்களில் தெரிவு முறைமை வெளிப்படையாக இருக்க வேண்டும் என்றும் அது வற்புறுத்தி இருக்கின்றது.

இந்த நியமன விடயங்களில் உயர்நீதிமன்றத்தின் கௌரவம், மதிப்பு, சுயாதீனம், தகைமை நிலை ஆகியவற்றைப் பேணுவதையும் கவனத்தில் கொள்ளுமாறு சட்டத்தரணிகள் அமைப்பு கோரி இருக்கிறது.

இந்தப் புதிய நீதியரசர்களின் நியமனம் எதிர்காலத்தில் இலங்கையின் நீதித்துறையின் செல்நெறியைத் தீர்மானிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

\+ \+ \+

இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய குழு மீண்டும் வரும் 18ஆம் திகதி திருகோணமலையில் கூட இருக்கிறது.

புதிய அரசமைப்பு உருவாக்க விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையில் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை உருவாக்கும் முயற்சியாக வரும் 25ஆம் திகதி தமிழ்க் கட்சிகளின் சந்திப்பு ஒன்றுக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. அழைப்பு விடுத்திருக்கிறார். இது தொடர்பாக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரனுடனும் ரெலோவின் செல்வம் அடைக்கலநாதனுடனும் அவர் பேச்சு நடத்தி இருக்கிறார்.

இந்த விடயம் குறித்து தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை முடிவு செய்வதற்காக கட்சியின் மத்திய குழு இப்போது கூடுவதாகத் தெரிகிறது.

அது மட்டுமல்லாமல், உள்ளூராட்சி சபைகளுக்கு புதிதாக வேட்பு மனுக்களைக் கோரி, தேர்தலை நடத்துவதற்கு அரசு முடிவெடுத்துள்ள நிலையில், அந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை எதிர்கொள்ளும் மார்க்கம் குறித்தும் 18ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு ஆராயும் எனத் தெரிகின்றது.

---

## சிறீதரன் எம்.பிக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதன்பின்னர் அவர் புலனாய்வு அதிகாரிகளின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சமயம் குற்றவியல் வழக்குக் குற்றச்சாட்டொன்று இருக்கின்றது எனக் கூறப்பட்டது.

"பழைய கடவுச்சீட்டில் ஒரு தவறு இருக்கின்றது. அதனால் நீங்கள் போக முடியாது." – என்று அங்கு நின்ற அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சமயம் விமான நிலையம் ஊடாகப் பயணித்த மற்றுமோர் நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் விமான நிலைய அதிகாரிகளுடன் உரையாடினார்.

இதையடுத்து சுமார் இரண்டு மணி நேரத்தின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டார்.

---

## உலகத் தமிழாராய்ச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 51 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முற்றவெளியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சி.வி.கே.சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர்களுக்கான ஆராய்ச்சி மாநாடு பல இடங்களில் நடைபெற்றாலும் தமிழர் பிரதேசத்தில் கடும் அச்சுறுத்தல்கள், எதிர்ப்புகளுக்கு மத்தியில் இங்கு நடைபெற்றது.

இந்த மாநாட்டை நடத்த விடக் கூடாது என்பதில் அப்போதைய ஆட்சியாளர்கள் உறுதியாக இருந்தனர். ஆனால், எல்லாவற்றையும் தாண்டி திட்டமிட்டபடி மாநாடு இங்கு நடாத்தப்பட்டது.

ஆட்சியாளர்களின் தமிழர் விரோதச் செயற்பாடுகள் அன்று தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. இவ்வாறு தமிழர்களுக்கு எதிரான தெற்கத்தேய ஆதிக்கம் என்பது அன்று முதல் இன்று வரை மிகத் தெளிவாகவே இடம்பெறுகின்றது.

ஆட்சியாளர்களை எதிர்த்துத்தான் 1974 ஆம் ஆண்டு இந்த மாநாட்டை இந்த மண்ணிலே நடத்தினார்கள். இதன்போது ஆட்சியாளர்கள் மேற்கொண்ட படுகொலைதான் தமிழர்களின் தற்காப்புப் போராட்டத்துக்கு வித்திட்டது.

அதன் பின்னர்தான் ஆயுதப் போராட்டம் பரிணமித்தது. கடந்த முப்பது வருடங்கள் நடந்த ஆயுதப் போராட்டத்துக்கு வித்திட்டது இந்தப் படுகொலை தான். இவை எல்லாவற்றையும் எமது மக்கள் கவனத்தில்கொள்ள வேண்டும்.

ஆனால், இன்றைய நிலைமையில் பார்க்கின்றபோது கூட தமிழர் விரோதச் செயற்பாடுகள் மிகத் தெளிவாக இடம்பெறுகின்றமை தெரிகின்றது.

இவ்வாறான நிலைமையில் திசை மாறிச் செல்கின்ற சூழ்நிலையில் நாங்கள் இருக்கின்றோம். குறிப்பாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலை எடுத்துப் பார்த்தால் அதிர்ச்சியூட்டும் வகையில் தெற்கத்தைய தலைமைகளுக்கான பிரதிநிதிகளை எங்கள் மக்கள் தெரிவு செய்திருக்கின்றார்கள்.

இது உண்மையாகவே புரிந்து கொள்ள முடியாத நிலையாக இருக்கின்றது. தெற்கத்தேய சிந்தனைகளையும் எங்களது சிந்தனைகளையும் எமது மக்களே புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே, எங்களக்குள்ளே இருக்கின்ற கருத்து வேறுபாடுகள் எவ்வாறு இருந்தாலும் எமது மக்களுக்கான தலைமைத்துவம், எங்களுடைய மக்களின் பிரதிநிதித்துவம் எங்களுடைய தலைமைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டுமே தவிர ஒரு தெற்கத்தேய தலைமைத்துவதற்திற்கு கீழ் இருக்கக்கூடாது. ஆக தலைமைத்துவம் எப்போதும் எங்களுடையதாகவே இருக்க வேண்டும்.

கடந்த தேர்தலில் தெற்கத்தேய தலைமைகளுக்கு வாக்களித்தவர்கள் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். இனிமேல் அடுத்து வருகின்ற தேர்தல்களில் அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

ஆகவே, இனிமேல் தமிழ்த் தேசியத்தோடு பலமாக நிற்கின்ற நிலைக்கு மக்கள் தம்மை மீளாய்வு செய்ய வேண்டும். நாங்கள் பல்வேறு அச்சுறுத்தல்கள் அடக்குமுறைகளுக்கு மத்தியில் வாழ்ந்திருக்கின்றோம்.

இழப்புக்கள், துன்பங்கள், துயரங்களை நினைவில் நிறுத்தி மாற்றுச் சிந்தனையோடு மீளாய்வு செய்து கொள்ள வேண்டும் என்பதுடன் இதனை அனைவருமே கவனத்தில்கொள்ள வேண்டும்." – என்றார்.

---

## சாணக்கியன்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சென்றுள்ளனர்.

சென்னை சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இந்திய நாடாளுமன்றில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கனிமொழியைச் சந்தித்து ஈழத் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் சம்பந்தமாகவும், மத்திய அரசில் தமிழ் நாட்டின் குரலை எமக்காகத் தொடர்ந்து எழுப்புவது சம்பந்தமாகவும் உரையாடினர்.

தமிழ்நாட்டில் இரு தினங்கள் இடம்பெறும் மாநாட்டில் பங்குகொண்டு எதிர்வரும் 13 ஆம் திகதி மேற்படி மூவரும் நாடு திரும்பவுள்ளனர்.

---

## தமிழரசுக் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொருளாதார அபிவிருத்தி நிறுவனங்களுக்கான அலுவல்கள் அமைச்சர் ஹறி ஆனந்தசங்கரிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை சந்திப்பு நடைபெற்றது.

கொழும்பு, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், பத்மநாதன் சத்தியலிங்கம், சண்முகம் குகதாசன், ஞானமுத்து ஸ்ரீநேசன், இளையதம்பி ஸ்ரீநாத் ஆகியோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக தலதா அத்துகோரள கடமைகளை பொறுப்பேற்றார்

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள நேற்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் அவர் கடமைகளைப் பொறுப்பேற்றார்

முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தலதா அத்துகோரளவை இந்தப் பதவிக்கு நியமித்தார்

இந்தப் பதவியை முன்னதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார வகித்திருந்தார்.

# நுண்நிதி, கடன் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை சட்டமூலம் அறிக்கை நிதியமைச்சிடம் கையளிப்பு




நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை சட்டமூலத்தை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு தமது அறிக்கையை நிதி அமைச்சிடம் கையளித்துள்ளது.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குப்படுத்தலுக்காக 2023 ஆம் ஆண்டு இந்த சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்டது.

இதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட 6 அடிப்படை உரிமைகளை விசாரணை செய்த உயர்நீதிமன்றம், சட்டமூலத்தின் பல சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானது என உத்தரவிட்டிருந்தது.

இதன்பின்னர், சட்டமூலம் தொடர்பில் மீண்டும் கருத்து கோருவதற்காக குழு நியமிக்கப்பட்டதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அரச சார்பற்ற அமைப்பு தொடர்பான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் நாயகமான சஞ்ஜீவ விமல குணரத்ன உள்ளிட்ட 9 பேர் அடங்கிய குழு இதற்காக நியமிக்கப்பட்டது.

அந்த குழுவின் அறிக்கையே தற்போது நிதியமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.




# ரோஹிங்கிய அகதிகளைத் திருப்பியனுப்பவேண்டாம் கொழும்பில் கவனயீர்ப்புப்போராட்டம் முன்னெடுப்பு

மியன்மாரிலிருந்து நாட்டுக்கு வருகை தந்திருக்கும் ரோஹிங்கிய அகதிகளைத் திருப்பியனுப்பவேண்டாம் எனக்கோரி நேற்று வெள்ளிக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக இந்த கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.












# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சுத்தம் சாத்தியமா?

தேசிய மக்கள் சக்தி அமைத்துள்ள புதிய அரசு 'கிளீன் சிறிலங்கா' என்று புதுக் கதை - பீலா - விடுகின்றது.

அதன ஒட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ்.சிவகஜன் சுட்டியுள்ள ஒரு விடயம் கவனிக்கத் தக்கது. அது தனித்து அவரது கருத்து மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழினத்தின் கருத்தாகவும் அது கொள்ளத் தக்கது.

யுத்தத்தால் அரசாங்கத்தின் கைகளில் இரத்தக் கறை படிந்திருப்பதை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர், புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'கிளீன் சிறிலங்கா' வேலைத்திட்டத்தை அந்தக் கறைகளைப் போக்குவதற்காகவும் பயன்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

"சிறிலங்காவினுடைய அரசாங்கம் நல்லிணக்கம் தொடர்பிலான உரையாடலை இந்த நாட்டில் அதிகம் பேசிக் கொண்டிருக்கிறது. அதே சமயம் 'கிளீன் ஸ்ரீலங்கா' என்ற புதிய ஒரு செயற்றிட்டத்தையும் இந்த அரசு இந்த நாட்டிலே செயற்படுத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்த அரசின் கைகள் முழுமையாக இனப்படுகொலையின் காரணமான, ஓர் இனத்தின் மீது வலிந்து திணித்த அந்தப் போரின் காரணமாக, இரக்கத் கறை படிந்திருக்கிறது. அதனை அந்த அரசு சுத்தம் செய்வதற்கு முன்வர வேண்டுமென இந்த மாணவர் சமூகமாக நாங்கள் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்." - என்கின்றார் அவர்.

'கிளீன் சிறிலங்கா' என்ற பெயரில் தனியே சுத்தம், சுகாதாரம், தெருக்களை சுத்தப்படுத்துகிறோம் என்பதில் மாத்திரம் இந்த அரசின் இலக்குகள் அமைந்துவிடக்கூடாது. அது எப்பொழுதுமே மக்களின் மனங்களில் உள்ள ஆதார வடுக்களை, ரணங்களை தணிப்பதாகவும் இருக்க வேண்டும். அதுவும் இந்த நாட்டை தூய்மைப்படுத்தக்கூடிய ஒரு செயல்தான் என்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி கூறுகின்றார்.

அரசுநிர்வாகத்தை தூய்மைப்படுத்துவது பற்றி புதிய அரசு பேசுகிறது.

லஞ்சம், ஊழல், மோசடி போன்ற குற்றங்களற்ற தூய இலங்கையை உருவாக்குவது பற்றியும் இந்த அரசாங்கம் பிரபலாபிக்கின்றது.


வெளிப்படையான அரசு நிர்வாகம், மக்கள் சேவையை ஒழுங்குபடுத்துதல், அரச ஊழியர்களின் உயர் வினைத்திறனுடன் கூடிய பணியாற்றுகை என்று தன்னுடைய 'கிளீன் சிறிலங்கா' திட்டத்திற்கு பல்வேறு விளக்கங்களை - வியாக்கியானங்களை - அர்த்தங்களை - அரசுத் தரப்பு முன்வைக்கின்றது.

ஆனால் வடக்கு, கிழக்கு தமிழர்களைப் பொறுத்தவரை - ஏன் நாட்டின் சிறுபான்மையினரைப் பொறுத்தவரை - இந்த நாட்டில் சிறுபான்மை இனங்களுக்கு எதிராகப் பேரினவாதம் புரிந்து வரும் அடக்குமுறைதான் குற்றங்களில் பெரும் குற்றமாக - மிக மோசமான குற்றமாக - கணிக்கப்பட வேண்டும் என்பதுதான் அவர்களின் நிலைப்பாடு.

தமிழர்களைப் பொறுத்தவரை யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை சுத்தம் செய்யப்படாத - நாற்றம் அடிக்கின்ற - மிகக் குரூரமான, மிக மோசமான அழுக்குகள். அந்தக்குற்றங்களுக்குநியாயம் செய்வதுதான் இது விடயத்தில் நாட்டையும் சமூகத்தையும் ஆட்சி முறையையும் சுத்தம் செய்யும் முதல் நடவடிக்கையாக இருக்க முடியும். இருக்க வேண்டும்.

இந்த விடயத்தில் - யுத்தக் குற்ற விடயங்களில் - உண்மைகளைக் கண்டுபிடித்து, நீதியை வெளிப்படுத்தி, பொறுப்புக் கூறலை நிலை நாட்டி, அந்த விடயத்தில் கெட்டுப் போயுள்ள தமது பெயரைச் சுத்தம் செய்யத் தயாராக இல்லாத பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுகள், 'கிளின் சிறிலங்கா' என்ற பெயரில் எடுக்கும் சுத்தப்படுத்தும் நடவடிக்கை வெறும் பம்மாத்து நாடகமேயன்றி வேறில்லை.





# வரலாறு என்பது
# பரிணாமம் > பரிமாணம்



கருணாகரன்

பிராந்திய அரசியலில் தமிழ்த்தேசியக் கட்சிகள் பின்னடைவைச் சந்தித்துள்ள போதும், இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டும் வெற்றியடைந்துள்ளது அல்லது தப்பிப் பிழைத்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் அதற்கு எட்டு ஆசனங்கள் கிடைத்துள்ளன. தமிழ்க் காங்கிரஸுக்கு ஓரிடமும் ரெலோவுக்கு ஓரிடமும் கிடைத்திருக்கின்றன. ரெலோ அரும்பொட்டில் அந்த இடத்தைப் பெற்றது.

வரலாற்றில் சில ஆச்சரியமான சங்கதிகள் இருப்பதுண்டு. அப்படியான ஒன்றே, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கான இந்த இடம். 50 ஆண்டுகளுக்கு முன்பே (1972 இல்) காலாவதியாகிப்போன தமிழரசுக் கட்சி, எதிர்பாராத வரலாற்றுச் சுழிப்புகளுக்கூடாக மீளுயிர்ப்படைந்து வெற்றிப் பீடத்தில் ஏறியிருக்கிறது என்றால், ஆச்சரியப்படாமல் இருக்க முடியுமா? ஆனால், இந்த வெற்றியை அது கொண்டாட முடியாமல் உள்ளது. அதற்குள் நடந்து கொண்டிருக்கின்ற அதிகாரப் போட்டிகளும் அதன் வெளிப்பாடாகியிருக்கும் உட்கட்சி மோதல்களும் கட்சியைப் பாடாய்படுத்திக் கொண்டிருக்கின்றன. உட்கட்சி மோதல்கள் வலுவடைந்து, எல்லையை மீறி, நீதிமன்றம் வரையில் சென்றுள்ளன. இப்பொழுது ஏட்டிக்குப் போட்டியாகப் பல வழக்குகள். மேலும் மேலும் புதிய புதிய வழக்குகள். இந்த வழக்குகள் இப்போதைக்கு முடியுமென்று தெரியவில்லை. அப்படி முடிந்தாலும் புதிய வழக்குள் முளைக்கக் கூடிய சாத்தியமே அதிகமாக உண்டு.

இந்த நிலையில் கட்சி எப்படி தன்னுடைய பவள விழாவை மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியும்? அப்படிக் கொண்டாட முற்பட்டால் அதையிட்டும் சில பல வழக்குகள் தொடரப்படலாம். பவள விழாக் கொண்டாட்டங்களில் யாரை முதன்மைப்படுத்துவது, யாரைக் கைவிடுவது, யாரைப் பின்தள்ளுவது, யாரைப் பலியிடுவது என்ற பிரச்சினை (உட்கட்சி அரசியல்) கட்சிக்குள் உருவாகி மேலும் பிளவுகளும் வழக்குகளும் பெருகும் என்பதால் 75 ஆவது ஆண்டு நிறைவு யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வநாயகம் நினைவுத் தூபிக்கு மாலை அணிந்து, மரியாதை செலுத்தி, எளிமையான முறையில் கொண்டாடப்பட்டுள்ளது. இதிற் கூட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ளவில்லை. சிலவேளை எதிர்வரும் மாதங்களில் ஏதாவது அதிசயம் ஏற்பட்டு, பவள விழாவைக் கொண்டாடக் கூடும்.

## பின்னணிக்கதை

1949 ஆம் ஆண்டில் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி (Illankai Tamil Arasu Kachchi, ITAK, முன்னாள் சமஷ்டிக் கட்சி, Federal Party) செல்வநாயகத்தின் காலத்திலேயே (1972 இல்) காலாவதியாகி விட்டது. இதைச் செல்வநாயகமே வெளிப்படையாகச் சொல்லியிருந்தார் - ஒப்புக் கொண்டிருந்தார். அதை முன்னிட்டு அவர் கூறினார், 'தமிழர்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேணும்' என்று.

செல்வநாயகத்தின் அரசியற் பயணம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் தொடங்கியது. காங்கிரஸுடன் முரண்பட்டுக் கொண்டே அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்திருந்தார். ஆகவே அவரைப் பொறுத்தவரை ஈழத் தமிழர்களுக்காக அன்றிருந்த இரண்டு கட்சிகளும் இயலமைக்குள்ளாகியிருந்தன என்ற சூழலில்தான் செல்வநாயகம் அப்படிச் சொன்னார்.

அதற்குப் பிறகு, கட்சியின் அடுத்த நிலையிலிருந்த, அடுத்த தலைமுறையைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், புதியதொரு உத்தியைப் பயன்படுத்தினார். தமிழரசுக் கட்சியையும் தமிழ்க் காங்கிரஸையும் இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார் அமிர்தலிங்கம். அதாவது, அதே போத்தலுக்கு புதிய லேபிளை ஒட்டிக் காட்சிப்படுத்தினார் அமிர்தலிங்கம். 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி

தொடர்ச்சி▼

# வரலாறு என்பது
# பரிணாமம் > பரிமாணம்


**தொடர்ச்சி▲**

பெருவெற்றியைப் பெற்றது. ஆனாலும் அந்த வெற்றி, அடுத்து வந்த நான்கு ஆண்டுகளோடு முடிவுக்கு வந்தது.

1981 இல் ஆட்சியிலிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமையை அறிமுகப்படுத்தினார். அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி அதை ஆதரித்தது. அடுத்த தேர்தல் தமிழீழத்தில்தான் என 1977 ஆண்டு தேர்தல் மேடைகளில் பிரகடனப்படுத்தப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு அமிர்தலிங்கம் சம்மதம் தெரிவித்தமை, அன்றைய இளைஞர் இயக்கங்களுக்குக் கடுமையான கோபத்தை உண்டாக்கியது. விளைவாக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரிசையாகச் கொல்லப்பட்டனர்.சிவசிதம்பரம் காயங்களோடு தப்பினார். இன்னொரு தலைவரான தங்கத்துரை திருகோணமலையில் வைத்துக் கொல்லப்பட்டார். நீலன் திருச்செல்வம் கொழும்பில் கொல்லப்பட்டார். இப்படியே தமிழர் விடுதலைக் கூட்டணியின் (தமிழரசுக் கட்சியின்) தலைவர்கள் கொலைப்பட்டியலில் இருந்தனர். தப்பி, மிஞ்சிய தலைவர்கள் கொழும்பு அரசின் தயவில் - பாதுகாப்பில் வாழ்ந்தனர். 1994 இல் இரா சம்மந்தனுடைய பாதுகாப்புக்காக குண்டு துளைக்காத காரை கொழும்பு வழங்கியிருந்தது.

### இடைக்காலச் சூழல்

2001 இல் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் நடந்து கொண்டிருந்த பேச்சுவார்த்தையின்போது, ஜனநாயக ரீதியில் புலிகளுக்கு மக்களிடம் உள்ள செல்வாக்கை - ஆதரவை - நிரூபித்துக் காட்ட வேண்டும் என்ற





சுட்டிக் கொல்லப்பட்டனர். பொத்துவில் கனகரத்தினம், யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஆலாலசுந்தரம், உடுவில் தருமலிங்கம் (புளொட் சித்தார்த்தனின் தந்தை) என தலைகள் உருளத் தொடங்க, மிஞ்சியோர் நாட்டை விட்டே தப்பியோடி இந்தியாவில் தஞ்சமடைந்தனர். சிலர் புலம்பெயர்ந்து சென்று விட்டனர். மட்டக்களப்பு இராசதுரை அரசாங்கத்துடன் இணைந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் அரங்கிலிருந்து தூக்கியெறியப்பட்டது அல்லது துரத்தப்பட்டது அல்லது தூரப்போனது. எப்படியாவது வைத்துக் கொள்ளலாம்.

அதற்குப் பிறகு 1980 - 2009 வரை விடுதலை இயக்கங்களின் கைகளிலும் விடுதலைப் புலிகளிடமும்தான் வடக்குக் கிழக்கு (பிராந்திய) அரசியல் இருந்தது. தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவற்றின் அடையாளமோ செல்வாக்கோ வடக்குக் கிழக்கில் (தமிழ் பேசும் பிராந்தியத்தில்) இல்லாமல் போய் விட்டது. மட்டுமல்ல, அதனுடைய தலைவர்களான அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் 1989 இல் கொழும்பில் வைத்துக்

நிலை ஏற்பட்டது. இதற்காக அவர்கள் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி என்ற தங்களுடைய கட்சியின் சின்னத்தைப் பற்றியே முதலில் யோசித்தனர். அதைப் பயன்படுத்த முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. காரணம், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைத் தொடர்ந்து கட்சியாக இயக்க வில்லை என்பதோடு, அதனுடைய தலைவரான கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) உயிரோடில்லை என்பதும் பிரச்சினையாக இருந்தது. எனவே, தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட தரப்புகளோடு புலிகள் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். கூடவே வெளியே நின்ற ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, தமிழ்க்காங்கிரஸ் போன்றவற்றையும் ஒரே குடையின் கீழ்க் கொண்டு வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரு வாக்கப்பட்டது. கூட்டணியின் உதயசூரியன் சின்னம் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்டது. ஆனாலும் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் ஆனந்தசங்கரிக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டதால், உதய

**தொடர்ச்சி▼**

# வரலாறு என்பது

# பரிணாமம் > பரிமாணம்

தொடர்ச்சி▲

சூரியன் சின்னத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க முடியாது என்று ஆனந்தசங்கரி மறுத்தார்.

அதனால் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தைக் கூட்டமைப்புப் பயன்படுத்தும் நிலை உருவானது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பதிலாகத் தமிழரசுக் கட்சி என்ற அடையாளத்தோடு சம்பந்தன் மேலெழுந்தார். 1994 இல் கொழும்பின் ஆளாகக் கருதப்பட்ட சம்பந்தன், 2001இற்குப் பிறகு புலிகளின் ஆள் என்று சொல்லப்பட்டார். 1994 இல் கொழும்பு குண்டுதுளைக்காத பாதுகாப்பு வாகனத்தைச் சம்பந்தனுக்கு வழங்கியது என்றால், 2004 இல் புலிகளின் அங்கீகாரத்தோடும் மரியாதையோடும் சம்பந்தன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரானார்.

வரலாற்றில் ஆச்சரியமான சங்கதிகள் இருப்பதுண்டு என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? இங்கே துரோகி - தியாகி என்ற அடையாளப்படுத்தலோ, அரசியல் என்றால் இப்படித்தான் நேர்கோட்டில் செல்லும் என்ற அறியாமையின் பிடிவாதங்களுக்கோ இடமில்லை.

தனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பைச் சம்பந்தன் கெட்டியாகப் பிடித்துக் கொண்டமையோடு, தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்ளிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ போன்றவற்றைப் பலப்படுத்துவதை விட தமிழரசுக் கட்சி பரவாயில்லை. ஆயுதமேந்தாத தரப்பு என்ற வகையில் அதை எப்போதும் தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்ளலாம் என்று புலிகள் கருதினர். தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு வாய்ப்புகளிருந்தாலும் அப்போது அதைப் பயன்படுத்தக் கூடிய நிலையில் அதனுடைய தலைவராக இருந்த அப்பாத்துரை விநாயகமூர்த்தி முயற்சிக்கவில்லை. மட்டுமல்ல, சம்பந்தனுடைய சாமர்த்தியத்தை மிஞ்சக் கூடிய அளவுக்கு விநாயகமூர்த்தியிடம் ஆளுமையில்லை. அவர் மிகச் சாதுவான மனிதராக - சுளிப்புகள் எதுவும் தெரியாத அரசியல் தலைவராக (அப்பாவி விநாயகமூர்த்தியாக) இருந்தார்.

2009 இல் விடுதலைப் புலிகள் வீழ்ச்சியடைந்ததோடு சம்பந்தனுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் அடித்தது யோகம்.கேள்விக்கிடமில்லாத வகையில் தன்னையும் தமிழரசுக் கட்சியையும் ஸ்தாபித்தார் சம்பந்தன். இதற்காக அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்த ஏனைய தரப்புகளிலிருந்து ஆள்களை உருவியெடுத்தார். கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டும், சுழற்சியில் தலைமை மாற்றப்பட வேண்டும், கூட்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கைகளை எல்லாம் உதாசீனப்படுத்திய அல்லது பொருட்படுத்தாத ஒரு போக்கைப் பின்பற்றினார் சம்பந்தன். 'விரும்பினால் சேர்ந்திருங்கள். அல்லது வெளியேறிச் செல்லலாம்' என்ற மாதிரி நடந்து கொண்டார். இதனால் உண்டான விமர்சனங்களைப் பற்றியெல்லாம் சம்பந்தன் கவலைப்படவேயில்லை. பதிலாகத் தனக்கும் தமிழரசுக் கட்சிக்கும் பலம் சேர்க்கும் வகையில் கொழும்பிலிருந்து விக்னேஸ்வரன், சுமந்திரன், தவராஜா போன்றவர்களைச் சேர்த்தார். கொழும்பை மையப்படுத்தும் அரசியலுக்கு இவர்களெல்லாம் தேவையெனக் கருதினார். அதில் அவருக்கு வெற்றியும் கிடைத்தது.

சம்பந்தனுடைய இந்தப் போக்கையும் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தையும் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில் காங்கிரஸும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் வெளியேறின. சம்பந்தன் கவலைப்படுவேயில்லை. காரணம், அதற்குப் பிறகும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அதற்குள் முதன்மை பெற்றிருந்த தமிழரசுக் கட்சியும் பிராந்திய அரசியலில் முதன்மையைக் கொண்டிருந்தன. சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவரானார். விக்கினேஸ்வரன் ஒரு கட்டத்தில் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறிச் சென்றாலும் சம்பந்தனும் சுமந்திரனும் தமிழரசுக் கட்சியின் முகமாகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அடையாளமாகவும் இருந்தனர். இது கூட்டமைப்பில் எஞ்சியிருந்த ரெலோவுக்கும் புளொட்டுக்கும் தீராத தலையிடியாகவும் மாறாத அவமானமாகவும் இருந்தது. ஆனாலும் சம்பந்தனை முறித்துக் கொண்டு வெளியேற முடியாத நிலையில் தமிழரசுக் கட்சியோடும் சம்மந்தன் - சுமந்திரன் அணியோடும் இழுபட்டுக் கொண்டிருந்தன இரண்டும்.

2022 இல் உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதோடு, ரெலோவையும் புளொட்டையும் தனித்துப் போட்டியிடுமாறு தமிழரசுக் கட்சி கூறியது. இது அவற்றின் நச்சரிப்புக்குக் கொடுத்த அடி என்று தமிழரசுக் கட்சியினர் சொன்னார்கள். அதோடு கூட்டமைப்பு முடிவுக்கு வந்தது. சம்பந்தனின் மறைவும் கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பதவிக்காலத்தின் முடிவும் கூட்டமைப்புக்கு முற்றுப்புள்ளியை வைத்தது.

### பிந்திய கதை அல்லது தற்போதைய நிலை

சம்மந்தனுடைய மறைவோடு ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஜனநாயகப் போராளிகள் எல்லாம் இணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற புதிய கட்டமைப்பை வலுப்படுத்த முயற்சித்தனர். இதற்குக் கடந்த ஜனாதிபதித் தேர்தலை ஒரு மாற்றாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்பட்டனர். அதனுடைய விளைவே, தமிழ்ப்பொது வேட்பாளராகும் (சங்குக் கூட்டணியாகும்). ஆனால், தமிழரசுக் கட்சி இதற்கு மாறாகச் செயற்பட்டது. அது தன்னை வேறுபடுத்திக் கொள்வதற்காகச் சஜித் பிரேமதாஸவை ஆதரித்தது. ஆனாலும் கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி எட்டு ஆசனங்களைக் கைப்பற்ற, ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஓர் ஆசனத்தோடு பின்தள்ளப்பட்டது. காங்கிரஸுக்கு ஓர் ஆசனம் மட்டுமே கிடைத்தது.

இப்பொழுது தமிழரசுக் கட்சி வெற்றியடைந்த தமிழ்க்கட்சியாக - பிராந்திய அரசியல் சக்தியாக ஒரு தோற்றத்தில் உள்ளது. ஆனால், வடக்குக் கிழக்குப் பிராந்தியத்தில் ஆளும் தேசிய மக்கள் சக்தி 12 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. போனஸ் ஆசனத்தையும் சேர்த்தால் தேசிய மக்கள் சக்தியின் இந்த எண்ணிக்கை கூடுதலாகவே இருக்கும்.

என்றாலும் தமிழ் அடையாளக் கட்சி என்ற வகையிலும் வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ்த்தேசியப் பிராந்திய அரசியற் கட்சி என்ற அடிப்படையிலும் தமிழரசுக் கட்சியின் வெற்றி புறக்கணிக்க முடியாதது. தனித்து நின்று அது இந்த வெற்றியைப் பெற்றுள்ளது. கட்சிக்குள் உள்மோதல்கள் பகிரங்கமான நிலையிலும் அதனால் வெற்றியடைய முடிந்திருக்கிறது என்றால், இதற்குப் பின்னுள்ள ரகசியம் என்ன? தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியைத் தேர்வு செய்ததற்கான காரணம் எது?

### போருக்குப் பிந்திய சூழல் - போருக்குப் பிந்திய அரசியல்

இது போருக்குப் பிந்திய சூழலாக (Post - War period) இருந்தாலும் தமிழ் மக்களும் தமிழ்த் தேசியவாதக் கட்சிகளும் போருக்கு முந்திய அரசியலையே (Pre-war politics) பின்பற்றுவதைக் காணலாம். ஆனால், இன்றைய தேவை போருக்குப்

தொடர்ச்சி▼

# வரலாறு என்பது
# பரிணாமம் > பரிமாணம்

**தொடர்ச்சி▲**

பிந்திய அரசியல் (Post-war politics) அல்லது தீர்வுக்கான அரசியல் (Politics of solution). அதாவது பிரச்சினையைப் பற்றிப் பேசுகிற, தீர்வைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் அரசியல் அல்ல. தொடர்ந்து பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் அரசியலும் தீர்வைப் பற்றிய விவாதங்களைத் தொடர்கின்ற அரசியலும் முரண்பாட்டு அரசிய லாகும் (Conflict politics). அதாவது நடைமுறையில் இருப்பது இந்த முரண்பாட்டு அரசியலே (Conflict politics) ஆகும். பிரச்சினைகளைப் பேசக் கூடாது என்று யாரும் கேட்கலாம். அதையே தொடர்ந்தும் பேசிக் கொண்டிருக்க முடியாது. அவற்றுக்குத் தீர்வைக் காண வேண்டும். பிரச்சினைகளோடு தொடர்ந்து எந்தச் சமூகமும் வாழ முடியாது. நோயுடன் ஒருவர் வாழ்நாளெல்லாம் வாழ முடியுமா?

ஆகவே இந்த முரண்பாட்டு அரசியலானது மக்களுடைய எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தராது என்பதால்தான் தமிழ் மக்கள் அரசியல், சமூக, பொருளாதாரப் படிநிலையில் பின்னோக்கியும் கீழிறங்கியும் செல்ல நேர்கிறது. இதனால்தான் பெருமளவானோர் மண்ணை விட்டுப் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். இருக்கின்ற மக்களும் தமிழ்த்தேசிய அரசியலை விட்டு, பிராந்திய அரசியலில் இருந்து ஒதுங்கி, தேசிய அரசியலின் பக்கமாக நகரத் தொடங்கியுள்ளனர். இது தனியே கடந்த தேர்தலில் மட்டும் நடந்த மாற்றமல்ல. இதற்கு முன்பும் தமிழ்த்தேசிய சக்திகளுக்கு பெரிய வெற்றி கிடைத்தது என்று கூற முடியாது. 2009 இல் இருந்த தமிழ்த்தேசிய ஆதரவுத் தளம் இறங்கியே வந்திருக்கிறது. இதை இன்னொரு வகையில் சொல்வதானால் பிராந்திய அரசியல் (Regional politics) தேக்கத்துக்குள்ளாகி விட்டது. அப்படியானால் பிராந்திய அரசியல் முடிவுக்கு வந்து விட்டதா? இலங்கை அரசு தொடர்ந்தும் மோசமான முறையில் இனவாத ஒடுக்குமுறையை மேற்கொண்டாலே ஒழிய தமிழ்த்தேசிய அரசியலை - பிராந்திய அரசியலை - இதே நிலையில் பின்பற்ற முடியாது. சுருக்கமாகச் சொன்னால், தமிழ்ச்சமூகத்தின் நலிவே தமிழ்த்தேசியவாத அரசியலின் நலிவாகும்.

### தற்போதைய நிலையும் எதிர்காலமும்

தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசியக் கட்சி, தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டணி, தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் எல்லாம் வெவ்வேறு அணியாக இருந்தாலும் இவற்றின் அரசியல் கோட்பாடும் சிந்தனையும் நடைமுறையும் ஒரே மாதிரியானவையே. முரண்பாட்டு அரசிய லிலேயே இவற்றின் தளம் உள்ளது. மக்களுக்குத் தேவையானது தீர்வுக்கான அரசியல் (Politics of solution) ஆகும்.

அதைச் செய்யாத வரையில், அதைப்பற்றிச் சிந்திக்காத வரையில் எந்தக் கட்சி வெற்றி யீட்டினாலும் அது தமிழ் மக்களின் வெற்றியாக அமையாது. ஏற்கனவே அமிர்தலிங்கமும் சம்பந்தனும் எதிர்க்கட்சித் தலைவர்களாகக் கூட இருந்துள்ளனர். அப்படியிருந்தும் தீர்வை எட்டவோ தமிழ் மக்களுக்குப் பயன் கிட்டவோ இல்லை. இந்த நிலையில் தமிழரசுக் கட்சி பெற்ற வெற்றி என்பது, வழமையைப்போல தரப்பின் வெற்றியாக - கட்சியின் வெற்றியாக - அமையுமே தவிர, அது தமிழ் மக்களின் வெற்றியாக அமையாது.

இந்த நிலையில்தான் தமிழரசுக் கட்சிக்கு இப்பொழுது 75 ஆவது ஆண்டு. தமிழர்களின் கொண்டாட்டப் பருவத்தின்படி பார்த்தால் இது பவள விழா ஆண்டு. அதனுடைய நிலையின்படி இது அதற்கொரு வெற்றியே. ஆனால், ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்ட அரசியற் கட்சி என்ற வகையிலும் தமிழ் மக்களுடைய அரசியல் விடுதலையை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட கட்சி என்ற அடிப்படையிலும் அது தான் கொண்ட இலக்கு எதையும் அடையவே இல்லை. ஆகவே அது தன்னுடைய 75 ஆண்டு பவள விழாவைக் கொண்டாடுவதில் அர்த்தமில்லை. மட்டுமல்ல, இந்த 75 ஆண்டுகளிலும் தமிழரசுக் கட்சி முன்மொழிந்த அரசியலுக்காக பல்லாயி ரக்கணக்கானோர் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். பல ஆயிரக்கணக்கானோர் தங்கள் உடல் உறுப்புகளை இழந்து நிற்கின்றனர். பல லட்சம்பேர் மண்ணை விட்டுப் பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். இந்த நிலையில் தமிழரசுக் கட்சியினால் பவள விழாவைக் கொண்டாட முடியுமா? மட்டமல்ல, கட்சிக்கு யார் தலைவர்? யாருடைய வழிநடத்தலில், யாருடைய கட்டுப்பாட்டில் கட்சி இருக்கிறது என்றே தெரியாத நிலையே நீடிக்கிறது.

உண்மையில் சம்பந்தனுடைய இறுதிக் காலத்திலும் சரி, அவருக்குப் பிந்திய தற்போதைய சூழலிலும் சரி, தமிழரசுக் கட்சியின் முழுமையான கட்டுப்பாடும் செல்வாக்கும் சுமந்திரன் அணியிடமே உள்ளது. மாவை சேனாதிராஜா தலைவராக இருந்தபோதும் அவரால் கட்சியைக்கட்டுப்பாட்டுடன் வழிநடத்த முடியவில்லை. சிறிதரன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோதும் அந்தப் பொறுப்பை எடுக்கும் துணிவோ, சூழலோ அமையவில்லை. என்பதால் மத்திய செயற்குழுவே கட்சியை வழிநடத்துகிறது. மத்திய செயற்குழு சுமந்திரனின் செல்வாக்குக்குட்பட்டது. சிலர் கருதலாம், கட்சிக்குள்ளும் தேர்தலிலும் சுமந்திரன் தோற்க டிக்கப்பட்டதால், தமிழரசுக் கட்சியிலிருந்து சுமந்திரன் தூரப் போய் விட்டார், தோற்கடிக்கப்பட்டு விட்டார் என்று. அப்படியல்ல, தற்போதைய பதில் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், சாணக்கியன், சுமந்திரன் ஆகிய மூவருமே தமிழரசுக் கட்சியின் முகங்களாக சர்வதேச சமூகத்துக்கும் தென்னி லங்கைக்கும் தெரிகின்றனர். தமிழரசுக் கட்சியின் இயங்கு விசை இவர்களே! பேச்சுவார்த்தை தொடங்கினால் அல்லது அரசியலமைப்புப் பற்றிய பேச்சுகள் எழுந்தால் சுமந்திரனின் கொடியே பறக்கும்.

இந்த நிலையில்தான் கடந்த சில வாரங்களுக்கு முன்பு, கனடாவுக்குச் சென்ற சிறிதரனிடம், அங்குள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழரசுக் கட்சியின் கிளைகளை புலம்பெயர்ந்த நாடுகளில் ஆரம்பிப்பதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். கனடாவில் மட்டுமல்ல, புலம்பெயர் மக்கள் வாழ்கின்ற பிற நாடுகளிலும் இவ்வாறு கிளைகள் ஆரம்பிக்கப்படலாம். ஆனால், அது தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை வளர்ப்பதாக (Conflict politics) இருக்குமே தவிர, பிரச்சினைகளைத் தீர்க்கும் அரசியலாக (Politics of solution) இருக்காது.

அப்படியென்றால், பயன்தராத மரத்துக்கு ஏன் தண்ணீரும் உரமும்? என்ற கேள்வி எழுகிறது. அந்தக் கேள்வியை தமிழரசுக் கட்சியை நோக்கி எல்லோரும் கேட்க வேண்டும். தமிழரசுக் கட்சியை புத்துருவாக்கம் செய்தால்தான் - புத்தாங்கங்கள் உருவாகும். தற்போது முன்னெடுக்கும் 1970 க்கு முந்திய அரசியலினால் ஒரு போதுமே முன்னேற்றம் நிகழாது. எனவே இன்றைய தமிழரசுக் கட்சி தன்னை முழுதாகப் புனரமைப்புச் செய்ய வேண்டும். அதற்கொரு சிறப்பான முன்னு தாரணம், JVP கட்சி NPP யான கதை. பரிணாமம், பரிமாணம். நீண்ட வரலாற்றுப் பெருமிதங்களை விடவும், வரலாற்றிலிருந்து எதைக் கற்றுக் கொள்கிறோம் என்பதே முக்கியமானது. ■

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை தினமும் மலையகத் தியாகிகளின் தினமும் நேற்று அனுஷ்டிப்பு

## யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில்


















மலையகத் தியாகிகள் தினம் மற்றும் 4 ஆவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் நேற்று வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக பொதுத் தூபியில் மாணவர்களினால் உணர்வெழுச்சி யுடன் முன்னெடுக்கப்பட்டது.

தேயிலைச் செடிகளின் நடுவே உழைப்புச் சுரண்டல்களுக்கும் அடிப் படை உரிமை மீறல்களுக்கு உள் ளாக்கி அடிமைப்படுத்தப்பட்ட மலையக தமிழ் மக்களினுடைய சமூக அரசியல் விடுதலைக்கான பயணத்தில் தம்முயிர் தந்த எம்மவர்களை நினைவேந்தும் மலையக தியாகிகள் தினம் – ஜனவரி 10.

1974 ஆம் ஆண்டு நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் சிறீலங்கா அரச காவல்துறையால் அரங்கேற்றப்பட்ட படுகொலைக ளால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட கொடூரம் நிகழ்ந்து 2025 ஆம் ஆண்டுடன் ஆண்டுகள் 51.

இன்றுவரையில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான நீதி என்பது மறுக்கப்பட்டதொன்றாகவே நீள்கின்றது.



# 90 வகையான மருந்துகளின் விலைகளைக் குறைக்கத் தீர்மானம்

90 வகையான மருந்துகளின் விலைகளை குறைப்பதற்கு ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

இதற்காக சில மருந்து நிறுவனங்கள் மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கிற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நகர்த்தல் பத்திரம் ஊடாக விடயங்களை முன்வைக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் மருந்துகளின் விலைகளை குறைக்கும் நடவடிக்கையை விரைவில் முன்னெடுக்கவுள்ளதாக ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

# புலி இனத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் மீன்பிடிப் பூனை இறந்த நிலையில் மீட்பு!

## கோட்டைக் கல்லாறுப் பகுதியில் நேற்று





**(பாறுக் ஷிஹான்)**

Prionailurus viverrinus என்கின்ற மீன்பிடிப் பூனை (Fishing cat) இனத்தை சேர்ந்ததென நம்பப்படும் அரிய வகைப் புலியின் உடலம் நேற்று மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோட்டைக் கல்லாற்றில் இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மீன்பிடி பூனை என்று அழைக்கப்படும் இந்த அரிய வகைப் புலி காடுகளில் இருந்து மக்கள் வாழும் பகுதியில் உள் நுழைந்து மீன் மற்றும் கிராம வாசிகளின் வளர்ப்புப் பிராணிகளை வேட்டையாடி வந்த நிலையில் இப்படிச் சிக்கி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோட்டைக்கல்லாறு பிரதான வீதியில் மீட்கப்பட்டுள்ள சுமார் 3 அடி நீளமான இப்புலி விபத்து சம்பவத்தினால் உயிரிழந்துள்ளதா அல்லது யாராவது தாக்கிக் கொல்லப்பட்டதா என்ற விசாரணைகளை வன வன ஜீவராசி திணைக்களமும் பொலிஸாரும் ஆரம்பித்துள்ளனர்.

இப்புலியின் உடலத்தைச் சுற்றி மல்லிகைப் பூக்கள் தூவப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

இது அண்மைக்காலமாக அப்பகுதியில் உள்ள கோழிகளை வேட்டையாடி வந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதே போன்று அண்மையில் கோட்டைக்கல்லாறு பாலம் அருகிலும் புலியின் உடலம் ஒன்றும் மீட்கப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

மீன்பிடிப் பூனைகள் சற்று பெரிய பூனைகள் ஆகும். இவை வீட்டுப் பூனைகளைவிட இரண்டு மடங்கு பெரியவை. இது பழுப்பு நிறம் கலந்த சாம்பல் நிறத்தில் உடலும், அதில் கரும் புள்ளிகளும், குறுகிய வாலும் உண்டு. இதன் கன்னத்தில் ஒரு சோடி பட்டைகள் காணப்படும். நெற்றிப் பகுதியில் ஆறுமுதல் எட்டுவரையிலான கருங்கோடுகள் இதன் தனித்த அடையாளம் ஆகும். கருப்பு நிற கோடுகள் மற்றும் புள்ளிகளுடன் கூடிய ஆழமான மஞ்சள்-சாம்பல் நிற ரோமங்களைக் கொண்டிருக்கும்.22 முதல் 31 அங்குலம் வரை வளரக்கூடியவை .

பெரும்பாலும் ஈரநிலங்களுக்கு அருகில், ஆறுகள், நீரோடைகள், சதுப்பு நிலங்களில் இவை வாழ்கின்றன. அங்கு அது பெரும்பாலும் மீன்கள், பறவைள், பூச்சிகள், சிறிய விலங்குகள், பாம்புகள் உள்ளிட்ட ஊர்வனங்களை வேட்டையாடும்.

மீன்பிடி பூனை இரவு நேரங்களில் வெளியில் அதிகமாக நடமாடக் கூடியது. இது நல்ல முறையில் நீந்தி நீருக்கடியில் கூட நீண்ட தூரம் செல்லக்கூடியது.

இந்த மீன்பிடிப் பூனை இலங்கையில் கொடுப்புலி என அழைக்கப்படுவதுடன் ஒரு நடுத்தர காட்டுப்பூனையாக குறிப்பிடப்படுகின்றது. இது தென் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் இம்மாவட்ட பொதுமக்கள் சிலர் இந்த அரிய வகை புலி போன்ற பூனை இனங்களை பிடித்து வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்த சம்பவமும் இடம்பெற்றுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# ஈரோடு இடைத்தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் வெற்றிக்கு விடுதலைச் சிறுத்தைகள் பணியாற்றும்!



## திருமாவளவன் தெரிவிப்பு

“ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி வெற்றி பெறும். இதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தீவிரமாக தேர்தல் பணி ஆற்றும்.”

– இவ்வாறு மதுரையில் வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

மதுரை மேலூர் பகுதியில் டங்ஸ்டன் சுரங்க திட்டத்தை கைவிட வலியுறுத்தி அனைத்து அரசியல் கட்சிகளும், பொது மக்களும் தொடர் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இதன் தொடர்ச்சியாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில், மேலூரில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க தொல். திருமாவளவன் நேற்று சென்னையில் இருந்து மதுரை சென்றார்.

இதன்போது விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“டங்ஸ்டன் சுரங்கம் தொடர்பாக மத்திய அமைச்சரான கிஷன் ரெட்டியிடம் வி.சி.க. சார்பில் நேரில் சந்தித்து திட்டத்தை கைவிடக்கோரி கோரிக்கை மனு அளித்துள்ளோம். இத்திட்டத்தை முழுவதுமாக ரத்து செய்யவேண்டும்.

பல்கலைகழக மானியக்குழு அண்மையில் வெளியிட்ட புதிய விதிகள் மாநில உரிமைகளை பறிப்பது போன்றுள்ளது. உயர் கல்வி அனைத்தையும் மத்திய அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய விதிகளை கொண்டிருக்கிறது. துணைவேந்தர், பேராசிரியர்கள் நியமனத்தில் மாநில அரசுக்கு எந்த அதிகாரமும், உரிமையும் இல்லை என்பது போல கொண்டு வரப்பட்டுள்ளது. இதை வன்மையாக கண்டிக்கிறோம். உடனடியாக புதிய விதிகளை திரும்ப பெறவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி வெற்றி பெறும். இதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தீவிரமாக தேர்தல் பணி ஆற்றும். அண்மைக் காலமாக பெரியார் மீது ஆதாரமின்றி அவதூறுகளை திட்டமிட்டு பரப்பப்படுகிறது. நீண்ட காலமாகவே சங்பரிவார் அமைப்புகள் இதுபோன்ற சதி வேலைகளை செய்கிறது. மொழி, இனத்தின் பெயரால் அரசியல் செய்யும் அமைப்புகளும் பெரியாரை குறிவைப்பது அதிர்ச்சியளிக்கிறது.

சீமான் பேச்சு நாகரிகத்தின் எல்லையை மீறியதாக உள்ளது. குதர்க்க வாதமாக உள்ளது. அவர் பேசும் அரசியல் அவருக்கே எதிராக முடியும். தமிழ், தமிழர்களுக்காக தனது இறுதி மூச்சு வரையில் தீவிரமாக களப்பணி ஆற்றுவேன். தமிழக மக்களின் சமூக நீதியும் தேசிய அடையாளமாக இருக்கும், தந்தை, பெரியாரை கொச்சைப்படுத்துவது ஏற்புடையது அல்ல. இப்போக்கை சீமான் கைவிட வேண்டும். சீமான் பேச்சை அண்ணாமலை ஆதரிப்பார். அவர் சார்ந்த அமைப்புகளை ஆதரிக்கும் சீமான் புரிந்து நடக்க வேண்டும்.” – என்றார்.

# மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி மத்திய அரசுக்கு ஸ்டாலின் கடிதம்



இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி மத்திய அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் குறிப்பிடுகையில்,

“காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 இந்திய மீனவர்களையும் அவர்களது மீன்பிடி விசைப்படகையும் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட 10 மீனவர்களில், 6 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்.

மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு மீன்பிடித் தொழிலை மட்டுமே பெரிதும் நம்பியுள்ளனர். அவர்களை, இலங்கைக் கடற்படையினர் சிறைபிடிப்பதால், குடும்பத்தினர் மிகுந்த துயரத்திற்கு ஆளாகியுள்ளனர். தற்போதைய நிலவரப்படி 102 மீனவர்கள் அங்கு உள்ளனர். 210 மீன்பிடி படகுகளும் இலங்கை வசம் உள்ளன.

எனவே, உரிய தூதரக வழிமுறைகளை முன்னெடுத்து, இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்று அவர் தெரிவித்துள்ளார்.



# டில்லியில் காற்றின் தரக்குறியீட்டில் பாதிப்பு; 150 இற்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதம்

இந்தியா முழுவதும் தற்போது குளிர்காலம் நிலவி வருகிறதுடன் குறிப்பாக வட இந்தியாவில் இந்த காலத்தில் கடும் குளிரும், பனிப்பொழிவும் நிலவி வருகிறது

அதன்படி, வட இந்தியாவில் இப்போது குளிர்காலம் நிலவி வருவதால் அங்குக் கடுமையான மூடுபனி நிலவுகிறது. இதனால் டில்லியில் நேற்று மட்டும் 150 இற்கும் மேற்பட்ட விமானங்களும் சுமார் 26 ரயில் சேவைகள் பாதிக்கப் பட்டுள்ளன.

இதனிடையே, டில்லியில் காற்றின் தரக்குறியீடு நேற்று காலை 6 மணி அளவில் 408 ஆக பதிவாகியுள்ளதுடன் இது மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் கூற்றுபடி, மிகவும் மோசமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாடகர் பி.ஜெயச்சந்திரன் மறைவுக்கு இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



பின்னணி பாடகர் பி.ஜெயச்சந்திரன் மறைவுக்கு இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

“தமிழ் மற்றும் மலையாள திரை உலகின் தலைசிறந்த பின்னணி பாடகர் பி.ஜெயச்சந்திரன் (வயது 80) நேற்று காலமானார் என்ற செய்தி ஆழ்ந்த வேதனை அளிக்கிறது. காலனி ஆட்சி காலத்தில் இருந்த கொச்சி சமஸ்தானத்தின் ரவிபுரம் என்ற ஊரில், நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்த ஜெயச்சந்திரன் திரை இசை பின்னணி பாடகர்களில் தனித்துவம் பெற்று விளங்கியவர்.

தமிழில் அவர் பாடிய பாடல்கள் அனைத்தும் மக்களின் கவனத்தை ஈர்த்து, இன்றும் செல்வாக்கு செலுத்தி வருகின்றன. மலையாள திரைப்படங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியவர். கடந்த 1958 ஆம் ஆண்டில் பாடகர் கே.ஜே.ஜேசுதாசன் இளைஞர் விழாவில் பங்கேற்று பாடி, பாராட்டுதல்களை பெற்றவர். மேலும், தேசிய அளவில் சிறந்த பாடகர் என்ற விருது பெற்ற ஜெயச்சந்திரன், கேரள அரசின் விருதுகள் ஐந்து முறையும், தமிழ்நாடு அரசிடம் இரண்டு முறை விருதுகளை பெற்ற சிறப்புக்குரியவர்.

சேர்ந்திசை மேதை கலைஞர் எம்.பி.சீனிவாசன் குழுவில் இணைந்து செயல்பட்டவர். முன்னணி இசை அமைப்பாளர் அனைவரது இசையிலும் பாடல்கள் பாடிய பெருமைக்குரியவர். அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கொம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரையுலக நண்பர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# இஸ்ரேல் – துருக்கி இடையே போர் ஏற்படும் அபாயம்!

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அதிகரித்து வரும் பதற்றத்துக்கு நடுவே இஸ்ரேல்– துருக்கி போர் ஏற்படலாம் என்று பரபரப்பான தகவல் வெளியாகி உள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவிற்கு அந்த நாட்டின் முன்னாள் தேசிய பாதுகாப்பு தலைவர் சார்பில் விரிவான அறிக்கை அளிக்கப் பட்டுள்ளது.

அதில் துருக்கி ஒட்டோமன் பேரரசை உருவாக்கும் நோக்கத்தில் இந்த போர் இருக்கலாம், இஸ்ரேல் பிரச்சி னையை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து வருகிறது. அதேபோல் பலஸ்தீனத்தின் காசாவில் ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் போர் புரிந்து வருகிறது.

இந்த 2 போர்களிலும் சுமார் லட்சக்கணக்கானவர்கள் கொல்லப் பட்டுள்ளதுடன் மேலும் லட்சக்கணக் கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இதனால் மத்திய கிழக்கு பிராந் தியத்தில் தொடர்ந்து பதற்றம் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் தான் அடுத்ததாக இஸ்ரேல் – துருக்கி இடையே போர் வெடிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு தகவல் சென்றுள்ளதோடு, எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவிக் கையில்,

“மத்திய கிழக்கு பிராந்தியத்தின் அடிப்படை என்பது மொத்தமாக மாறி உள்ளதை காண முடிகிறது.

ஈரான் நமக்கு பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. தற்போது புதிதாக இன்னொரு சக்தி களத்தில் நுழைந்துள்ளது. அந்த வகையில் பார்த்தால் நாம் அனைத்து அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

இந்த அறிக்கை என்பது எதிர் காலத்தை இஸ்ரேலை பாதுகாக்கும் பாதை மேப்பாக உள்ளது. அதன்படி எதிர்காலத்தில் நாம் நகர்வோம்.” என தெரிவித்துள்ளார்.



# லொஸ் ஏஞ்சலிஸ் காட்டுத்தீயினால் உயிரிழந்தவர்கள் 10 ஆக அதிகரிப்பு

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸ் பகுதியில் பரவிவரும் காட்டுத்தீயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளது.

இந்தநிலையில், உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கக்கூடும் என அந்த நாட்டு அதிகாரிகள் அச்சம் வெளியிட் டுள்ளனர்.

அத்துடன், காட்டுத்தீயானது, காற்று காரணமாக மேலும் அதிகரிக்கக்கூடு மென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மேற்படி பகுதி யில் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவு வதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரி விக்கின்றன.

மேற்படி பகுதியை விட்டு பெரு மளவானவர்கள் வெளியேறியுள்ள நிலையில், அங்கு திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அந்த நாட்டு பாதுகாப்பு தரப்பு தெரிவித்துள்ளது.

இதன்படி, காட்டுத்தீயின் போது திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சுமார் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சில பகுதி களில் ஊரடங்கு உத்தரவைப் பிறப் பிப்பதற்கும் அமெரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 11.01.2025




கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். நீங்கள் எந்தச் செயல் செய்தாலும் மகிழ்ச்சியாக உற்சாகமாக செய்யுங்கள். இதனால் நன்மை விளையும்.

இன்று நீங்கள் சிறப்பாகவும் விரைந்தும் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உறவின் அம்சங்களுக்கு மதிப்பு அளிப்பீர்கள். நட்பான உறவு கொள்வீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். திருப்திகரமாக இருக்கும். நீங்கள் பணம் அதிகம் சேமிப்பதற்கான நிலையும் காணப்படும்.

இன்று நீங்கள் போதிய ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் இருப்பீர்கள்.




உங்கள் செயல்திறனை மேம்படுத்துங்கள். இன்று வெற்றி கிடைக்கும் நாள். உங்களை முன்னேற்றிக்கொள்ளலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணி செய்யும் பாணியில் மாற்றங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

பெரியோர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியமான உறவிற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி மிதமாக இருக்கும். வரவு செலவு இரண்டிற்குமான வாய்ப்பு அதிகம். பணத்தை கவனமாக கையாள்வது சிறந்தது.

இன்று சளி சம்பந்தமான பிரச்சினை காணப்படும். மேலும் கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று எதிர்பாராத நன்மை கிடைக்க வாய்ப்புள்ளது. என்றாலும் இன்று முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது பொறுமை அவசியம்.

இன்று உறவில் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பேசத் தொடங்குமுன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசித்து பேச வேண்டியது அவசியம்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் கவலையை ஏற்படுத்தும்.

இன்று பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உணவுக் கட்டுப்பாடு மேற்கொள்வது சிறந்தது. இனிப்பு வகை உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று பெரும்பாலும் உங்களுக்கு சாதகமான நாள். இன்று நல்ல நண்பர்கள் மற்றும் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள உகந்த நாள். பொது நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதன் மூலம் மகிழ்ச்சியும் திருப்தியும் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். தொழிலைப் பொறுத்த வரை நல்ல லாபம் கிடைக்கும்.

குடும்பத்தில் அமைதியும் திருப்தியும் காணப்படும். உங்கள் வீட்டில் விருந்தினர்களின் வருகை உற்சாகத்தை அளிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றலும் உயர்ந்து காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் சளி இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




முயற்சியின் மூலம் வெற்றி கிடைக்கும் நாள். பயணம் மூலம் வெற்றி காண்பதற்கு வாய்ப்புள்ள நாள்.

பணியிடச் சூழல் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் உறவில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படும். என்றாலும் இன்று பொதுவாக இன்று மகிழ்ச்சி நிலவும் நாள்.

பணம் அதிகமாக காணப்படும். இன்னும் அதிக பணம் தேவைப்பட்டால் வங்கியில் கடன் வாங்கி அதனை நல்ல முறையில் பயன்படுத்தலாம்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை உணர்வீர்கள்.




இன்று உங்களுக்கு நோக்கம் நிறைவேறும் வகையில் பயனுள்ள முடிவுகளை எடுக்கும் நாள். இன்று நீங்கள் நற்பலன்களை எதிர்பார்க்கலாம்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். பணியில் உங்கள் திறமைகளை நிரூபிக்க பல வாய்ப்புகள் கிடைக்கும்.

இன்று உறவில் அமைதியும் நல்லிணக்கமும் காண்பீர்கள். குழந்தைகளின் வளர்ச்சி மனத் திருப்தியை அளிக்கும்.

பங்குகளில் முதலீடு செய்வது லாபகரமாக இருக்கும். பங்கு வர்த்தகம் மூலம் லாபம் கிடைக்கும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக உணர்வீர்கள்.




இன்று துடிப்பான நாள். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதில் இன்று நீங்கள் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவீர்கள்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. பணியில் உங்கள் திறமை பிரகாசிக்கும்.

உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் பணம் காண்பீர்கள். உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்துக்குச் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் சுய வளர்ச்சிக்கு இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் நலனுக்காக இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணியில் சீரான பலன்கள் கிடைக்கும். இன்று பணிகள் எளிதாகவும் சுமூகமாகவும் நடக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நீங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் அமைதியான உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை பொறுத்தவரை சிறப்பான நாள். இன்று நிதிநிலையை சிறப்பாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் மற்றும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.01.2025




இன்று நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். உங்கள் செயல்களை செய்யுங்கள். ஆனால் உடனடி பலனை எதிர்பார்க்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது. நீங்கள் பணியில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். சுமூகமாகப் பணிகள் நடக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்பத்துக்குத் தேவையான பிணைப்பு இன்று காணப்படாது. பேசும் போது கவனம் தேவை.

அதிக செலவுகள் காரணமாக இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். சேமிப்பும் குறைவாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். தியானம் மேற்கொள்வது சிறந்தது.




முக்கிய முடிவுகளை வேறொரு நாளைக்கு தள்ளிப்போடுவது சிறந்தது. சுப காரியங்கள் நடப்பதும் தாமதம் ஆகும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணியில் பிரகாசிக்க நீங்கள் நம்பிக்கையுடன் செயல் பட வேண்டும்.

குடும்பத்தில் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிடம் நல்லுறவு பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். சேமிப்பு பழக்கத்தை பராமரிப்பது நிதியின் ஸ்திரத்தன்மைக்கு உதவும்.

கால்கள் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று சமநிலையான நாள். நல்லுறவையும் நல்ல புரிந்துணர்வையும் பராமரிக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தொழில் செய்பவர்களுக்கு இன்று சிறப்பான நாள். அதிக லாபம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. வேலை புரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும்.

குடும்ப உறவில் அன்பும் நல்லிணக்கமும் காணப்படும். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று லாபம் காண்பீர்கள்.இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

சளிப் பிரச்சினை காணப்படும். மற்ற படி உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இது உங்களுக்கு சிறிது வருத்தம் அளிக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். இன்று நீங்கள் ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

பணியிடச் சூழல் சாதகமாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது மாறுபட்ட அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் உறவில் அன்பு மயமான உணர்வும் உற்சாகமும் காணப்படும். உங்கள் குடும்பத்தில் நடக்கும் நிகழ்சிகள் குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்துடன் இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




# கொழும்புத் துறைமுக கிழக்கு முனையத்தின் நிர்மாண பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்த துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளதாக துறைமுகங்கள், விமான சேவைகள் பிரதியமைச்சர் ருவன் கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அதானி நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் மேற்கு முனைய அபிவிருத்தி பணிகளை அடுத்த மாதத்திற்குள் நிறைவு செய்ய முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இருமுனையங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்தவுடன் கொழும்பு துறைமுகத்தின் வருடாந்த கொள்கலன் நடவடிக்கை கொள்ளளவு 8 மில்லியனிலிருந்து 13 மில்லியனாக அதிகரிக்குமென துறைமுகங்கள், விமான சேவைகள் பிரதியமைச்சர் ருவன் கொடிதுவக்கு குறிப்பிட்டுள்ளார்.

இது நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் சர்வதேச சந்தைக்கும் வலுவான பிரவேசமாக அமையுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.